பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 09 2026 SUNDAY 7 15 PM ஆகாஷவாணி – செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா - சவுதி அரேபியா இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.
- புதுதில்லியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளனர்.
- மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது, இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- ரஷ்யா - யுக்ரைன் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து பேச்சுகள் நடத்த, அமெரிக்க சிறப்புப் பிரதிநிதிகள் Kyiv நகருக்குச் சென்றுள்ளனர்.
- சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை பட்டம் வென்றது.

>>>>>>>><<<<<<<

தொழிலாளர் நலன் மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறைகளில் இந்தியா - சவுதி அரேபியா இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

அரசுமுறைப் பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ள வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு.கீர்த்தி வர்தன் சிங், ரியாதில் இன்று அந்நாட்டு அமைச்சர் திரு. Ahmed Bin Sulaiman Ajrajhiயுடன் நடத்திய பேச்சுக்களின் போது இந்த முடிவு செய்யப்பட்டதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

மேலும் திறன் மேம்பாடு, சுற்றுச்சூழல் உள்ளிட்ட துறைகளில், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் அமைச்சர் அந்நாட்டு உயரதிகாரிகளுடன் விவாதிக்கவுள்ளார்.

சவுதி அரேபியாவில் பணியாற்றும் இந்தியத் தொழிலாளர்கள், இந்திய வம்சாவளியினர், மற்றும் தொழிலதிபர்களையும் திரு. கீர்த்திவர்தன் சிங் சந்தித்துப் பேச உள்ளதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<

புதுதில்லியில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில், ஒருவர் உயிழந்தார், 6 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் அதிக அளவில் தங்கியிருந்ததாக கருதப்படும் இக்கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கியுள்ள எஞ்சியவர்களை மீட்கும் பணியில் 18 தீயணைப்பு வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து, தில்லி துணைநிலை ஆளுனர் திரு. தரன்ஜித் சிங் சாந்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சம்பந்தப்பட்ட அனைத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணியை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

நிலைமை உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், மீட்புப் பணிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இடிபாடுகளில் சிக்கியிருப்போரை பத்திரமாக மீட்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அருகிலுள்ள கட்டடங்களில் வசிக்கும் மக்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக திருமதி. ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

அம்மாநிலத்தின் Churachandpur மாவட்டத்தில், தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில், ராணுவம் மற்றும் அஸ்ஸாம் ரைஃபில்ஸ் படைப்பிரிவினர், கூட்டாக மேற்கொண்ட சோதனையின்போது, ஐக்கிய குகி தேசியப் படையைச் சேர்ந்த தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் இருந்த முகாம்களில் நடத்தப்பட்ட சோதனையின்போது, ஏ.கே.-56 ரக துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டுகள், சீருடைகள், தகவல் ஒளிபரப்பு சாதனங்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளது.

அப்பகுதியில், மேலும் தீவிரவாதிகள் பதுக்கியுள்ளனரா என்பதைக் கண்டறிய, மலையடிவாரக் கிராமங்களில் தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, நிலக்கரித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு போதிய நிலக்கரி ஒதுக்கீடு செய்யாததால், அம்மாநிலத்தில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக, ஊடகங்களில் வெளியான செய்தியை மறுத்துள்ளது.

பஞ்சாபில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கு, தாமதமின்றி நிலக்கரி எடுத்துச் செல்லும் வகையில், பல்வேறு கட்டுப்பாடுகளிலிருந்து தளர்வு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பஞ்சாப் உட்பட நாடு முழுவதும், தடையற்ற மின் உற்பத்தி செய்ய ஏதுவாக, போதிய நிலக்கரி ஒதுக்கீடு செய்ய, கோல் இந்தியா நிறுவனம் உறுதி பூண்டுள்ளதாகவும் நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஆந்திர மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், மேயர், நகரமன்றத் தலைவர் பதவிகளுக்கு நேரடித் தேர்தல் நடத்த அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான நெறிமுறைகளையும் அம்மாநில அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, மாநகராட்சி மேயர், நகரமன்றத் தலைவர், நகரப் பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் வார்டு கவுன்சிலர் பதவிகளுக்கு நேரடித் தேர்தலும், துணை மேயர், நகர்மன்றத் துணைத்தலைவர் பதவிகளுக்கு மறைமுகத் தேர்தலும் நடத்தப்படும். இவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டுகள் ஆகும்.

இந்த உள்ளாட்சி அமைப்புகளில், ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பெண்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க ஏதுவாக, வரும் 8-ந் தேதி முதல் 21ந் தேதி வரை, இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த வாக்காளர் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கும் பணி மேற்காள்ளப்படும் என்றும் ஆந்திர அரசு தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

குஜராத்தை, போதைப்பொருள் பயன்பாடு இல்லாத மாநிலமாக மாற்றும் வகையில், அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலும், 7 நாட்களுக்குள், போதைப்பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவுகளை அமைக்க, அம்மாநில காவல்துறை முடிவு செய்துள்ளது.

இதற்கான உத்தரவை, குஜராத் காவல்துறைத் தலைமை இயக்குனர் திரு. Gyanendra Singh Malik பிறப்பித்துள்ளார்.

இதன்மூலம், போதைப்பொருள் கடத்தல், விற்பனை தொடர்பான குற்ற வழக்குகளை இந்த பிரத்யேக பிரிவினர், விரைந்து விசாரிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில், போதைப்பொருட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கடும் நடவடிக்கை காரணமாக, கடந்த ஐந்தாண்டுகளில் 3 ஆயிரத்து 700 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஐயாயிரத்து 346 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், குஜராத் காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

மத்தியப்பிரதேசத்தில் விஷச் சாராயம் அருந்தி உயிரிழந்தோர் எண்ணிக்கை 11-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மேலும் பலர், பண்டல்கண்ட் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சாகர் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம்மாநிலத்தின் சாகர் மாவட்டம், Banda தாலுகாவில் நிகழ்ந்த இச்சம்பவம் குறித்து, விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ள முதலமைச்சர் திரு.மோகன் யாதவ், இதற்குக் காரணமானவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதையடுத்து, மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள், சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் செயல்பட்டு வந்த 6 மதுபானக் கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டிருப்பதுடன், அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மதுபானங்களும் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

ரஷ்யா - யுக்ரைன் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து பேச்சுகள் நடத்த, அமெரிக்க சிறப்புப் பிரதிநிதிகள் இன்று Kyiv நகருக்குச் சென்றுள்ளனர்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் Steve Witkoff மற்றும் Jared Kushner ஆகியோர் மாஸ்கோவில் நேற்று நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, யுக்ரைன் மீதான தாக்குதல்களை, மூன்று நாட்களுக்கு நிறுத்திவைக்க ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் உத்தரவிட்டுள்ளார்.

அதேபோன்று, ரஷ்யாவுக்கு எதிரான தாக்குதல்களை, மூன்று நாட்களுக்கு நிறுத்தி வைக்கத் தயார் என்று யுக்ரைன் அதிபர் திரு.Volodymir Zelensky-யும் அறிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

உத்தரபிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா மற்றும் சண்டிகரில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லியில் மிதமானது முதல் கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், பீகார், உத்ராகண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் நாளை வரை இதே நிலை நீடிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஜம்மு கஷ்மீர், ஜார்க்கண்ட் மற்றும் சத்திஷ்கடில் நாளை வரை இடியுடன் கூடிய மழை தொடரும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 11-21, 21-13, 21-17 என்ற செட்கணக்கில் சீனாவின் Xiang Yu - Ji Ting இணையை வென்றது.

>>>>>>><<<<<<<

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று போட்டியில் இன்று இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் பங்களாதேஷை வென்றது.

>>>>>>><<<<<<<

போலந்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Yeshas Reddy பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-11, 21-12 என்ற செட்கணக்கில் போலந்தின் Jakub Mazurek-ஐ வென்றார்.

>>>>>>><<<<<<<

அஹமதாபாதில் நடைபெற்று வரும் உலக பாரா வில்வித்தை போட்டியின் தகுதிச்சுற்றில் இந்தியாவின் Sheetal Devi முதலிடத்தைப் பிடித்தார்.

>>>>>>><<<<<<<

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mansi Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

Almaty டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sutirtha Mukherjee - Syndrela Das இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>>><<<<<<<

உலக கோப்பை Pickle Ball சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம். ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை ஜுனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா - ஜப்பான் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 3 கோல் அடித்தன.

மகளிர் பிரிவில் இந்தியா 11-1 என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

>>>>>>>END<<<<<<<